**KWAZULU-NATAL**
**DEPARTMENT OF EDUCATION**

**SENIOR CERTIFICATE EXAMINATION**

# NOVEMBER 2007

# TAMIL
# STANDARD GRADE
# PAPER ONE

***Time*****:** 2 Hours ***Marks*****:** 80

***N.B. This question paper consists of 6 pages.***

**INSTRUCTIONS TO CANDIDATES**

**READ THESE INSTRUCTIONS CAREFULLY BEFORE ANSWERING THE QUESTIONS**

1. Write **ONE** composition.

2. Write **ONE** letter.

3. Answer **ALL** the questions in the READING STUDY passage. Do not write complete sentences. Only answers may be written.

4. You may use the last four pages of your answer book for rough work (Composition and Letter)

5. All answers must be in **TAMIL**.


**COPYRIGHT RESERVED**

# பகுதி ஒன்று

## கட்டுரை

**கீழ்வரும் ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சுமார் 1-1.5 பக்கங்களில் எழுதுக.**

1.1 எனக்குப் பிடித்த சில வீட்டு விலங்குகள்.

1.2 பூக்களும், அவற்றின் பயன்களும்.

1.3 கடைக்குச் செல்லும் வழியில் நான் பார்த்த ஒரு விபத்து.

1.4 மரங்கள்.

1.5 கடற்கரையில் ஒரு மறக்க முடியாத நாள்.

**(40)**

# பகுதி இரண்டு

## கடிதம்

**கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கடிதங்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி எழுதுக.**

2.1 ஐந்து நாட்களாக நீ பள்ளிக்கு வர முடியாததற்குக் காரணம் கூறி உன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

அல்லது

2.2 உன் புதியத் தமிழ் ஆசியரைப் பற்றி உன் தோழனுக்குக்/தோழிக்குக் கடிதம் எழுதுக.

**(20)**

# பகுதி மூன்று

**கீழ்க்காணும் கதையைக் கவனமாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும்.**

**Read the following passage carefully and answer the questions set on it.**

ஓர் ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவளுக்குக் கண்பார்வை கெட்டுவிட்டது. ஒரு மருத்துவரை அழைத்து வரும்படி அவள் தன் வேலைக்காரியிடம் சொன்னாள். வேலைக்காரியும் ஒரு மருத்துவ்ரை அழைத்து வந்தாள். தனக்குக் கண்பார்வை கிடைத்தால் நல்ல பரிசு அளிப்பதாக மருத்துவரிடம் கூறினாள். குணமடையாவிட்டால் எதுவும் கொடுக்கப் போவதில்லை என்றும் சொன்னாள். மருத்துவர் கிழவியின் கண்ணுக்கு மருந்து போடத் தொடங்கினார்.

மருந்து போடுவதற்காக மருத்துவர் பலநாள் கிழவியின் வீட்டுக்கு வந்து போனார். அவர் வரும்போதெல்லாம் கிழவியின் வீட்டில் உள்ள பொருள்களில் ஒன்றை எடுத்துச் சென்றார். கண் தெரியாததால் கிழவிக்கு இது தெரியவில்லை. நாளடைவில் அவள் கண்கள் குணமடைந்தன. வீட்டில் இருந்த பல பொருள்கள் காணாமற்போயிருப்பது கிழவிக்குத் தெரியவந்தது. அவள் மனம் வருந்தினாள். மருத்துவர்தான் அவற்றை எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று கருதினாள்.

வாக்களித்தபடியே பரிசு தருமாறு மருத்துவர் கிழவியை வற்புறுத்தினார். அவருக்கு எதுவும் தரமுடியாது என்று கிழவி மறுத்தாள். அதனால் மருத்துவர் அவள்மீது வழக்குத் தொடர்ந்தார். இருவரும் நீதிமன்றத்திற்குச் சென்றனர்.

''மருத்துவர் சொல்வதெல்லாம் உண்மையே. கண்பார்வை குணமடைந்தால் பொன் கொடுப்பதாய்க் கூறியிருந்தேன். மருத்துவர் மருத்துவம் செய்யத் தொடங்குமுன் என் வீட்டில் விலையுயர்ந்த பொருள்கள் பல இருந்தன. அவற்றை எல்லாம் இப்பொழுது என் கண்களால் பார்க்க முடியவில்லை. ஆதலால், என் கண்கள் குணமடையவில்லை. முன்பு நான் சொன்னபடி நான் பொன் கொடுக்கவில்லை'' என்று கிழவி நீதிபதியிடம் சொன்னாள்.

3.1. கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.

**Fill in the missing words in this paragraph taken from the passage.**

மருந்து போடுவதற்காக __3.1.1__ பலநாள் கிழவியின் வீட்டுக்கு வந்து போனார். அவர் வரும்போதெல்லாம் கிழவியின் வீட்டில் உள்ள 3.1.2______ ஒன்றை எடுத்துச் சென்றார். கண் தெரியாததால் கிழவிக்கு இது தெரியவில்லை. நாளடைவில் அவள் 3.1.3____ குணமடைந்தன. வீட்டில் இருந்த பல 3.1.4______ காணாமற்போயிருப்பது கிழவிக்குத் தெரியவந்தது. அவள் மனம் வருந்தினாள். மருத்துவர்தான் அவற்றை எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று 3.1.5____

(5)

3.2 பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடை தேர்ந்தெடுத்து எழுதுக.

**Choose the correct answer from the FOUR possible answers given and write it next to each number.**

3.2.1 கிழவி ஏன் மருத்துவரை வரச் சொன்னாள்?

(1) கிழவி தன் கண்களுக்கு மருத்துவம் செய்ய மருத்துவரை வரச்சொன்னாள்

(2) மருத்துவருக்குப் பரிசு கொடுக்க வரச் சொன்னாள்.

(3) மருத்துவரிடம் பணம் கேட்பதற்காக வரச் சொன்னாள்.

(4) மருத்துவரோடு உரையாடுவதற்காக வரச் சொன்னாள். (2)

3.2.2 மருத்துவர் எவற்றை எடுத்துச் சென்றார்.

(1) மருத்துவர் நகைகளை எடுத்துச் சென்றார்?

(2) மருத்துவர் பானைகளை எடுத்துச் சென்றார்.

(3) மருத்துவர் விலையுயர்ந்த பொருள்களை எடுத்துச் சென்றார்.

(4) மருத்துவர் அழகிய ஆடைகளை எடுத்துச் சென்றார். (2)

3.2.3 கிழவி பொருள்கள் களவு போனதை எப்போது அறிந்தாள்?

(1) வேலைக்காரி சொன்னதும் கிழவி பொருள்கள் களவு போனதை அறிந்தாள்.

(2) கண்கள் குணமானதும் களவு போனதை அறிந்தாள்.

(3) மருத்துவர் பேச்சிலிருந்து களவு போனதை அறிந்தாள்.

(4) உறவினர்கள் மூலம் களவு போனதை அறிந்தாள். (2)

3.2.4 மருத்துவர் கிழவியிடம் என்ன கேட்டார்?

(1) மருத்துவர் கிழவியிடம் சொத்து கேட்டார்.

(2) மருத்துவர் கிழவியிடம் வீடு கேட்டார்.

(3) மருத்துவர் கிழவியிடம் பரிசு கேட்டார். (2)

(4) மருத்துவர் கிழவியிடம் மருந்து கேட்டார்.

3.2.5 மருத்துவர் கிழவியின் மீது ஏன் வழக்குத் தொடர்ந்தார்?

(1) கிழவி பரிசு தராததால் வழக்குத் தொடர்ந்தார்.

(2) கிழவி குருடியாகிவிட்டதால் மருத்துவர் வழக்குத் தொடர்ந்தார்.

(3) கிழவி பணக்காரியாகிவிட்டதால் மருத்துவர் வழக்குத் தொடர்ந்தார்.

(4) கிழவி அயலூர் சென்றதால் மருத்துவர் வழக்குத் தொடர்ந்தார். (2)

3.3 பின்வரும் சொற்களுக்கு நேர் பொருளுள்ள சொல்லைக் கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

**Write a word that has more or less the same meaning from the four possible answers provided.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3.3.1 | கிழவி | (1) செவிடி | (2) முதியவள் | (3) பாட்டி | (4) வலைச்சி | (1) |
| 3.3.2 | மருத்துவர் | (1) குருடர் | (2) வைத்தியர் | (3) செல்வர் | (4) குயவர் | (1) |
| 3.3.3 | வருந்தினாள் | (1) கருதினாள் | (2) மகிழ்ந்தாள் | (3) தேடினாள் | (4) கவலைப் பட்டாள் | (1) |
| 3.3.4 | பரிசு | (1) பொருள் | (2) பண்ம் | (3) வெகுமதி | (4) புதையல் | (1) |
| 3.3.5 | பொன் | (1) வெள்ளி | (2) காசு | (3) மண் | (4) தங்கம் | (1) |

**(20)**

மொத்த மதிப்பெண்கள் **80**.